Registered as a Newspaper

Address being changed to the facilities of our customers.
V.T & SONS
QUALIFIED OPTICIANS and DENTIST
317, CLOCK TOWER ROAD, JAFFNA. (ADJOINING B·M·C)
Manager: Dr. REGI SOLAMAN

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

வாடிக்கையாளரின் நன்மைகருதி இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது
வி.ரி. அன் சன்ஸ்
பல்வைத்தியரும் கண் பரிசோதகரும்
317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (B·M·Cக்கு அருகாமையில்)
முகாமையாளர்: Dr. றெஜி சொலமன்

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஸு பங்குனி மீ 04 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 27 (17 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:30

● வடக்கு, கிழக்கில்

# சகஜ நிலை உருவாக்க

# இந்தியா பாடுபடும்

## காமினியிடம் ராஜீவ்

புதுடில்லி, மார்ச் 17

**வடக்கு - கிழக்கில் சகஜ நிலையை உருவாக்க இந்தியா பாடுபடும். அதற்கான முயற்சிகளில் நாம் இறங்கியுள்ளோம்.**

**இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் விசேட பிரதிநிதியாக வந்த அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவிடம் கூறினார் என அறியப்படுகிறது.**

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் நடத்த இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்றும், அதற்கு இந்தியாவின் பங்களிப்பு பூரணமாக இருக்கும் எனவும் அவர் எடுத்துரைத்தாராம்.

அமைச்சர் காமினிதிசநாயக்கா நேற்று புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.


பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஜனநாயகச் செயற்பாடுகளை மீண்டும் தொடக்க வேண்டும் என்று இச்சந்திப்பின் போது இருதரப்பிலும் வலியுறுத்தப் பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இலங்கையின் பொதுவான அரசியல் நிலைமை தீவிரவாத நடவடிக்கைகள், நான்கு மாகாண சபைகளின் தேர்தல்கள் பற்றி பேச்சுக்களின் போது ஆராயப்பட்டது.

ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் இரண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அவர் நவரத்தினத்தார் சொன்ன மாதிரி தமிழனுக்கு அடையாளக் கார்ட் என்ட "நாய்ப் பட்டி" சட்டுறதெண்டால் உவைக்கு அலாதி விருப்பம் பாத்தியளே...!

## கடலுக்குச் செல்லும் மீனவர்கள் பாஸ் வைத்திருக்க வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 17

தம்மை அடையாளம் காட்டிக்கொள்ள வசதியாக மீனவர்கள் கடலுக்குச் செல்ல முன் பாஸ் பெறவேண்டும் என்று இந்திய அமைதி காக்கும் படையினர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

மீனவர்கள் கடலுக்குச்செல்லுமுன்னர் அருகில் உள்ள அமைதிப் படைமுகாம்களில் பாஸ் பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் பாதுகாப்புப் படையினரால் மீனவர்கள் சோதனையிடப்படும் போது பாஸ்களைக் காட்டி மீனவர்கள் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளனர். (இ)

## ஆசிரியர் கலாசாலை கைதடிக்கு இடம் மாறுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 17

கோப்பாய்ப் பகுதியில் இயங்கி வரும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கைதடிக்கு இடம் மாற்றப்படும்.

கோப்பாயில் இடவசதி போதாமையினால் வெகு விரைவில் இக் கலாசாலை இடம் மாற்றம் செய்யப்பட உள்ளது.

இக்கலாசாலையை மீண்டும் பலாலிக்கு கொண்டு செல்லக்கூடிய சூழ்நிலை இன்னமும் உருவாகாமையாலும், பலாலியில் உள்ள மேற்படி கலாசாலை கட்டடங்களில் பெரிய அளவிலான திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதனாலும் கலாசாலையை தற்காலிகமாக கைதடிக்கு மாற்றம் செய்ய முடிவெடுக்கப் பட்டுள்ளது.

இக்கலாசாலை கைதடி மகாவித்தியாலயத்திற்கு இடம் மாற்றம் செய்யப்படும். [ஒ-9]

### சுபநேரம்

17-03-1988
பங்குனி 4
வியாழக்கிழமை
சுபநேரம்:
7-49 முதல் 9-19 வரை
ராகுகாலம்:
1-49முதல் 3-19 வரை.
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அமாவாசை விரதம்

## யாழ் - திருகோணமலை தொலைத் தொடர்பை புனரமைக்க உலக வங்கி உதவி

கொழும்பு, மார்ச் 17

யாழ்ப்பாணம்-திருகோணமலை தொலைத் தொடர்புச் சேவையைப் புனரமைக்க 1 கோடி 30 லட்சம் அமெரிக்க டாலர் செலவிடப்படும்.

இதற்கான திட்டம் ஒன்றை அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது.

இரண்டு கட்டங்களாகப் புனரமைப்பு வேலைகள் இடம்பெறும்.

முதல் கட்டமாக இரண்டு நகரங்களுக்கும் இடையே தற்காலிக ரீதியில் சேவை வழங்கப்படும். நிரந்தர இணைப்புக்கள் இரண்டாம் கட்டமாக வழங்கப்படும்

உலக வங்கி இதற்கு நிதி உதவி வழங்க முன்வந்து உள்ளது. (ஒ-எ)

## கிழக்குக்கு பெண் துணைவேந்தர்

கொழும்பு, மார்ச் 17

கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்தின் பதில் துணை வேந்தராக பேராசிரியை உமா குமாரசாமி நியமிக்கப்பட்டிருக்கின்றார்

பல்கலைக் கழக மானியக் கமிஷன் பெண் ஒருவரை பல்கலைக்கழக உபவேந்தராக நியமித்தது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

உபவேந்தரான பேராசிரியர் டேவிட் அருள் பிரகாசம் வெளி நாடு சென்றிருப்பதால் இப்பதில் நியமனஞ் செய்யப் பட்டது (இ-எ)

## வடக்கு-கிழக்கு சேதங்களை மதிப்பிட இந்திய அதிகாரிகள் குழு

கொழும்பு, மார்ச் 17

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட, நான்கு பேர் கொண்ட இந்திய அதிகாரிகள் குழு ஒன்று இலங்கை வந்திருக்கின்றது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் நேற்று அறிவித்தது.

இந்திய உயர் அதிகாரியின் தலைமையில் வந்துள்ள இக்குழு, முதலில் யாழ்ப்பாணம் செல்லும். பின்னர் மன்னார், திருகோணமலை மாவட்டங்களுக்குச் சென்று சேதங்களை மதிப்பீடு செய்யும்

இப்படி இந்தியத் தூதரக அதிகாரி தெரிவித்தார். (இ-எ)

## மாநகர சுத்திகரிப்பு வேலைகள் ஸ்தம்பிதமாகலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்பு வேலைகளும் ஸ்தம்பிதமடையக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் எரிபொருள் விநியோகத் தடை காரணமாகவும், எரிபொருள் விலை ஏற்றம் காரணமாகவும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் வழமையான நாட்களில் பலடிராக்டர்கள் சுத்திகரிப்பு சேவையில் ஈடுபட்டுவந்த போதிலும் தற்பொழுது ஒரு டிராக்டர் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருகிறது

இச் சேவையும் ஸ்தம்பிதம் அடையக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக மாநகர சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-10)

## யாழ் நகர் நேற்று சுற்றி வளைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ் - நகரப் பகுதி நேற்றுக் காலை இந்திய அமைதிப் படையினரால் சுற்றி வளைக்கப் பட்டது.

யாழ் ஆஸ்பத்திரி வீதி, பலலி வீதி, ஸ்ரான்லி வீதி கே. கே. எஸ் வீதி கஸ்தூரியார் வீதி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி இச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் இந்திய அமைதிப் படையினரால் யாழ் பஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

வாகன சேவைகளும் சில மணி நேரம் நிறுத்தப்பட்டன

சுமார் மூன்று மணித்தியாலமாக சுற்றி வளைப்பு மேற்கொள்ளப் பட்ட போதிலும்- அழைத்துச் செல்லப் பட்ட பலரும் விடுதலை செய்யப்பட்டனர் (ஒ-10)

## இலங்கைக்கு பீரங்கிப் படகுகள்

கொழும்பு, மார்ச் 17

தென் கொரியாவில் இருந்து மூன்று பீரங்கிப் படகுகளை இலங்கை வாங்கியது

இவற்றுடன் இலங்கைக் கடற் படையின் பீரங்கிப் படகுகளின் பலம் 65 ஆக அதிகரித்தது

புதிய பீரங்கிப் படகுகள் கடந்த வாரம் இலங்கை வந்து சேர்ந்தன. (ஒ-எ)

## ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு அடையாளக் கார்ட்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். ஆஸ்பத்திரிஊழியர்களுக்கு புதிய அடையாளக் கார்ட் வழங்குவதற்கான நடவடிக்கைகளை போதனா வைத்தியசாலைகள் அமைச்சு மேற்கொண்டுள்ளது

இதற்கான அடையாளக் கார்ட்டுக்கள் அச்சிடப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தற்பொழுது யாழ். குடாநாட்டில் பரவலாக திடீர் திடீர் எனநடத்தப் படும் சோதனைகளில் இருந்து தம்மை அடையாளம் காட்டிக் கொள்வதற்காகவே இது வழங்கப்படுகிறது. (இ-10)

## வடமராட்சியில் மீண்டும்...

வடமராட்சி, மார்ச் 17

வடமராட்சியில் முன்பு பாவித்து விட்டுச்சென்ற 'சென்றி'களை இந்திய அமைதிப் படையினர் மீண்டும் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். (ஒ 160)

## ஹர்த்தாலுக்கும் எமக்கும் தொடர்பில்லை

### விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

"எமது பெயரைச் சொல்லி யாழ்ப்பாணத்தில் பரப்பப்பட்டுள்ள ஹர்த்தால் பற்றிய வதந்திக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை மக்களுக்கு அறியத்தருகிறோம்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எமது பெயரைப் பாவித்து காரணமின்றி பொது மக்களைக் கொலை, கொள்ளைகளுடன் அச்சுறுத்தலுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கும் சமூக, தேசவிரோத சக்திகளுக்கு எச்சரிக்கையின்றி அதி உயர் தண்டனை எம்மால் வழங்கப் படும்" என்றும் 'உதயனு'க்கு' நேற்றுக் கிடைத்த அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 5 இளைஞர்கள் இன்று சாகும் வரை உண்ணாவிரதம்

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போகும் ஐந்து இளைஞர்களும் வடக்கு, கிழக்கு மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இன்று வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ள ஐந்து இளைஞர்களின் பெயர் ஞம் வருமாறு;

செபமாலை பிரான்ஸிஸ் பெரேரா (வயது 22), கந்தையா அமரசிங்கம், (வயது 31), ராமசாமி ராமன் (வயது 21), விஸ்வலிங்கம் ஜீவரத்தினம், (வயது 29), தங்கவேல் ராமதாஸ் (வயது 22) (ஒ எ)

## கிளிநொச்சியிலும் அன்னையர் உண்ணாவிரதம்

கிளிநொச்சி, மார்ச் 17

மட்டக்களப்பில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துவரும் அன்னையர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக கிளிநொச்சி அன்னையர் முன்னணியினரின் அடையாள உண்ணாவிரதம் கடந்த செவ்வாய் கிழமை உருத்திரபுரம் மணிகப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்றது.

காலை 8 மணிக்கு ஆரம்பமான உண்ணாவிரதம் மாலை 5 மணிவரை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் கிளிநொச்சி இந்திய இராணுவ உயர்அதிகாரி ஒருவரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப் பட்டது.

அம்மகஜரில் இந்தியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருந்த

# அன்னை அன்னம்மா

## இந்திய அமைதிப்படை முகாமுக்கு

## ஆலோசகர் ராசநாயகமும் கைது

கொழும்பு, மார்ச் 17

சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வந்த திருமதி அன்னம்மா டேவிட் இந்திய அமைதிப்படையின் மன்ரேஸா முகாமுக்கு நேற்று எடுத்துச் செல்லப்பட்டார்.

இப்படி இந்திய இராணுவத்தின் விசேட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி. பி. சி. வானொலி நேற்று இரவு அறிவித்தது.

அன்னம்மாவின் 2 புதல்விகளும் 1 புதல்வனும் இந்திய அமைதிப் படைக்கு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அன்னம்மாவின் 22 வயது மகளும் 14 வயது மகளும் 12 வயது மகனும் முறைப்பாடு செய்தார்கள் அவர்.

அன்னம்மாவுக்கு இந்தியப் படையினர் மன்ரேஸா முகாமில் வைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை தேர்தல் ஒரு கேலிக் கூத்து

### ருக்மன் சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 17

மாகாணசபைத் தேர்தல் ஒரு கேலிக்கூத்து.

ஐக்கிய இலங்கை மக்கள் கட்சித் தலைவர் ருக்மன் சேனநாயக்கா இப்படிச் சொன்னார்.

குருநாகலில் நடந்த புதன்கிழமை நடைபெற்ற கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசினார்

"எமது கட்சியின் கோரிக்கை பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்பதே ஜனநாயகம் சரிவர இயங்க பொதுத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும் திரு ருக்மன் சேனநாயக்கா சொன்னார் (ஒ-எ)

## யாழ். நகரப் பகுதி நேற்றும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

செவ்வாய்க்கிழமையைப் போன்று நேற்றும் (புதன்) யாழ்நகரப்பகுதிகளில் உள்ள கடைகள் மூடப்பட்டிருந்தன. மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப் பட்டது

வாகனச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவையில் ஈடுபட்டன.

யாழ் - ஆஸ்பத்திரியிலும் நோயாளர் வருகை மிகக் குறைவாகக் காணப்பட்டது.

பாடசாலைகள் இயங்கியபோதிலும் பத்துமணியுடன் அவை மூடப்பட்டு விட்டன.

நகர்ப் புறத்திலும் சூழவுள்ள இடங்களிலும் பாதுகாப்புப்படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்

அலுவலகங்கள் வழமைபோல் இயங்கினாலும் ஊழியர்கள் வருகை குறைவாகவே காணப் பட்டது

கொக்குவில், உரும்பிராய்ப் பகுதிகளில் குண்டுகள் வெடிக்க வைக்கப் பட்டதாகவும் செய்திகள் கிடைத்தன (ஒ-7-9-10)

## 519 பேர் நாடு திரும்புகின்றனர்

சென்னை, மார்ச் 17

112 குடும்பங்களைச் சேர்ந்த 519 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று புதுக்கோட்டையில் இருந்து கனிரயிலில் இராமேஸ்வரம் புறப்பட்டனர்.

இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்காக இவர்கள் கொண்டுவரப் பட்டனர் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் இளங்கோ தெரிவித்தார்

135 இலங்கைத் தமிழ் அகதிக் குடும்பங்களைக் கொண்ட இன்னொரு தொகுதி இம்மாதம் 31ஆம் திகதி புதுக்கோட்டையில் இருந்து கொண்டு வரப்பட்டு மண்டபத்தில் குடியமர்த்தப்படும்.

இப்படி அவர் மேலும் சொன்னார். (இ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட 2×5 அடி இரட்டைக் கதவு குளிர் சாதனப் பெட்டி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் ஜவ்ஹர் எலெக்ட்ரோ — பிளேட் டேஸ், 7 கஸ்தூரியார் லேன், கஸ்துறிட்டி சிவன் கோவிலுக்குக் கிட்டியதூரம் (2045)

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு தொடர்பு:- ச. உருத்திரன் மணியகாறன் லேன், கொக்குவில் கிழக்கு. கொக்குவில். (1931)

பேட்டுக் குஞ்சுகள். சேவற் குஞ்சுகள் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிரதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (1950)

**தேவை**

சகலவிதமான நவீன தையல், சட்டிங் பயின்ற பெண்கள் உடன் தேவை. 18 03 - 88 அன்று நேரில் வரவும் வெல்சம் சேல்ஸ் சென்ரர் 978, காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (3913)

**வகுப்புக்கள்**

Radio, T V Air Conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெகானிசம், வைண்டிங் Spoken English, Typing சிறந்த செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி, (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம் (1940)

**TYPEWRITER**

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises. 39 / 17, Power House Road, 3rd Lane, Jaffna (1803)

**தவறிவிட்டது**

செ. பத்மநாதன் என்பவருடைய அடையாள அட்டை 34223343 V, 14-3-88 அன்று ஸ்ரான்லி வீதியில் உள்ள இலங்கை வங்கிக்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். பத்மபதி, பிராம்பத்தை றோட், சங்கானை தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2062)

**மணப்பந்தல்**

32 வயதுடைய யாழ் உயர்வேளாளகுல சைவ ரோசன பட்டதாரி ஆசிரியைக்கு அரச உயர் தொழில் புரியும் 32-40 வயதுக்குட்பட்ட சைவ போசன மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு உதயன் விளம்பர இல. 92 (1965)

**ரேனியோ**

கிளின்- கட் உங்களை என்றும் வரவேற்கின்றது ரேனியோ வேலைகளுக்கு என்றும் நீங்கள் நாடும் இடம்: கிளின் - கட் இல 239, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

THANK YOU
ST. YUDE
FOR FAVOUR
GRANTED
RANI

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. ஆ. பொன்னுசாமி
(வண்ணார் பண்ணை)

தோற்றம்: 25 - 01 - 1927 இறைவன் அடி: 16 - 02 1988

அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், என்றும் சிரித்த முகத்துடன் எம்மை எல்லாம், ஆதரித்து, வழி நடத்தி மகிழ்வித்து எதிர்பாராவண்ணம் எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்த எமது செல்லத் தலைவனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

(1970)

## நீத்தார் பட்டியல்

### வீலிக்ஸ் போல் நேசராசா

(சமநலசேவை தொழில்நுட்ப அதிகாரி, மன்னார்)

மிருசுவிலைச் சேர்ந்த வீலிக்ஸ் போல் நேசராசா (சமநல சேவை தொழில்நுட்ப அதிகாரி, மன்னார்) அவர்கள் காலமாகிவிட்டார் இவர் வெலிச்சோர் பொன்னுத்துரை, மாகிறேற் மரியம்மாவின் அன்புப் புதல்வரும், மேரி புஸ்பத்தின் அன்புக்கணவரும், அச்சுவேலியைச் சேர்ந்த மாற்கு அன்னம்மாவின் மருமகனும், தவமணி (ஆசிரியை), ஜெயராணி (ஆசிரியை), றீற்ரூ (ஜெர்மனி), ரசாத்தி, யோகரஞ்சிதம் (வைத்தியபகுதி, கொடிகாமம்), பற்றிமா, கிங்ஸ்லி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் பிரான்சிஸ், அலெக்ஸாண்டர், நவரட்ணம் (ஜெர்மனி) பீற்றர் (மாக்பெட் யாழ்நகர்) யோசப் (சவூதி), மகேந்திரன், வசந்தராணி வவா(பிரான்ஸ்),மரியஞ்சலோ, மேரி இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சமுவேல், லில்லிமலர் ஆகியோரின் சிறிய மகனும், இராசமலர், ஆனந்தராசா, தங்கராணி, பொன்னர் (பாறின்) இரத்தினம்மா, தங்கராசா, றோசாறியோ (ஆசிரியர்), விக்ரர் (மின்னியலாளர்), பத்திநாதர் சிங்கம், (மின்னியலாளர்), ஜெபச்சந்திரன், ஜெயசீலன் ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தவிர்க்க முடியாத காரணத்தால் 14-3-88 அன்று அடக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

16, பற்றிமா அவனியூ,
மிருசுவில்.
(2064)

### திருமதி செல்லம்மா முத்துத்தம்பி

நல்லூர் சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கடந்த சில வருடங்களாகக் கொழும்பில் வசித்தவருமாகிய செல்லம்மா முத்துத்தம்பி 13-3 88ல் கொழும்பில் காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதிகளின் ஏகப்புதல்வியும், கதிரவேலு முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி (ஆசிரியை, திருநெல்வேலி றோ க த. க பாடசாலை) Dr. பரமேஸ்வரி (நல்லூர் மெடிக்கல் கிளினிக்) வைத்திய நிபுணர் Dr. செல்வராசா (அவுஸ்திரேலியா), செல்வநாயகி (ஆசிரியை, ஓமான்), கைலாயநாதன் (கணக்காளர், இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரசாமி (ஓய்வுபெற்ற அரசாங்க படம் வரை வல்லுனர்), கனகசுந்தரம் (அதிபர், கோப்பாய் மகாவித்தியாலயம்), லங்கா (அவுஸ்திரேலியா,) முத்துலிங்கம் (பொறியியலாளர், ஓமான்), இந்துமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்தி (யாழ்ப்பாணம் லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி), யசோதா (யாழ்ப்பாணம தொழில் நுட்பக் கல்லூரி), தயாளினி (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), பிரியதர்ஷினி (புனித ஜேம்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்) அரவிந்தா (Overseas Childrens School, Colombo), அபிராமி (அவுஸ்திரேலியா), ரவிவர்மன ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-3-88 இன்று 31, ஜெரல்மிட் பிளேஸ், கொழும்பு 7ல் நடைபெற்று 4-00 மணிக்கு தகனக் கிரியைக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தகவல்; கந்தையா குமாரசாமி
(Nanthini Chemical Industries
Thirunelvely.)

## நிவாரணம்

1987 ஆம் ஆண்டு ஆவணிமாதத்திற்குப் பின் நடைபெற்ற கலவரங்களினால் அங்கத்தவர்களை இழந்த குடும்பங்களுக்கு யாழ்ப்பாண வை. எம். சி. ஏ மண்டபத்தில் 19-3-88 சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும். அத்தாட்சிப் பத்திரத்துடன் வரவும். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (2066)

## 148 ஆம் நாள் நினைவஞ்சலி

17- 3- 1988



செல்வி விசுவலிங்கம் யோகம்மா

தோற்றம்: 25-9-1938 மறைவு: 22-10-1987

எங்கள் குல விளக்கே
எங்கே நீ சென்றிட்டாய்?
அச்சாணியாய்த் திகழ்ந்த உன்னை
அகால மரணம் அரவணைத்ததோ?
கண்ணீர் விட்டு நாம்
கதறி அழுகின்றோம்
பெரியம்மா என்றுன்னை
பெருமையுடன் அழைத்த நாங்கள்
மங்காத உன் சிரிப்பை
மறக்க மாட்டாது தவிக்கின்றோம்
ஆத்மா சாந்தி பெற இங்கு
அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உறவினர்

காங்கேசன்துறை வீதி,
இணுவில். (1619)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 30 - 9 - 1930 உதிர்வு: 29 - 3 - 1987

திதி: 17 - 3 - 88



அமரர்

இளையவி - கதிரவேலு (அம்மான்)

இவர் முன்னைநாள் புகையிலைகூட்டுத்தாபன சாரதியும் மினிபஸ் உரிமையாளரும் ஆவர்.

அன்பின் வடிவமே பண்பின் சிகரமே பாசத்தின் பிறப்பிடமே, நேர்மையின் சின்னமே! குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு திடீரென அணைந்து விட்ட அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் துதிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

சிறை,
சந்தை ஒழுங்கை,
தெல்லிப்பழை. (1966)

# 149 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும் ஆத்ம சாந்திக் கிரியையும்



### திருமதி வரதலட்சுமி சிவகுருநாதன்

**17-3-88 இன்று வியாழக்கிழமை நடைபெற இருக்கும் அந்தியேட்டியும் ஆத்ம சாந்திக் கிரியையும் 'ஜெயதரன் இல்லம்' சிவகுல வீதி, உரும்பராய் தெற்கில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

சிவபதமடைந்த

| | | | |
|---|---|---|---|
| திருமதி | வரதலட்சுமி | சிவகுருநாதன் | (42) |
| செல்வி | கோமதி | சிவகுருநாதன் | (16) |
| செல்வி | கிரிஜா | சிவகுருநாதன் | (14) |
| செல்வன் | கிரிதரன் | சிவகுருநாதன் | (12) |
| செல்வன் | ஜெயதரன் | சிவகுருநாதன் | (11) |
| செல்வன் | உதயாகரன் | சிவகுருநாதன் | (6) |



இந்த ஆறு பேருடைய ஆத்மாக்களும் சாந்தியடைய எமது கண்ணீரையே காணிக்கையாக்கி ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும்

| | | |
|---|---|---|
| கணவன் | — அப்பா | — சிவகுருநாதன் |
| அம்மா | — அம்மம்மா | — ராசம்மா |
| தம்பி | — மாமா | — தனபாலசிங்கம் |
| மச்சாள் | — மாமி | — சரஸ்வதி |
| மருமக்கள் | — மச்சான்மார் | — பிரதீபன், ஜீவகன்,திலீபன். |

மற்றும் உடன் பிறவாத சகோதர, சகோதரி குடும்பங்கள், மச்சான் மாமி குடும்பங்கள் மற்றும், உற்றார், உறவினர், நண்பர்கள்

உரிமையாளர் :
ஜெயதரன் மோட்டோர்ஸ்
ஆனைப்பந்திச் சந்தி,
யாழ்ப்பாணம்.

'ஜெயதரன் இல்லம்'
சிவகுல வீதி,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

(2055)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

உண்பதற்காக உயிர் வாழாது உயிர் வாழ்வதற்காக உண்ணுங்கள்.

— பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா

உதயன்

உண்மை - திருநோக்கம் - நடு நிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
17.03.1988 நூல் இல:-23

# கைப்பணியாளர் பென்ஷன் திட்டம்

கைப்பணியாளர்களுக்கு பென்ஷன், மற்றும் சமூக பாதுகாப்பு வழங்கும் திட்டம் ஒன்றை அமைச்சரவை கொள்கை அளவில் அங்கீகரித்திருக்கிறது.

அமைச்சர் தொண்டமான் இது சம்பந்தமான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இது தொடர்பாக பரிசிலனை செய்து சிபார்சு செய்வதற்காக அமைச்சரவையால் கமிட்டி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அமைச்சரின் இந்த யோசனை வரவேற்கத்தக்கது. ஏற்கனவே செயற்படுத்தி இருக்க வேண்டியது.

இந்த யோசனை சிறிது காலத்துக்கு முன்பே தெரிவிக்கப்பட்டிருந்தால் அது தற்பேது அமுலாகி ஆயிரக்கணக்கானோர் நன்மை அடைந்திருப்பர்.

மேலும் பலர் கைப்பணித் துறையில் ஈடுபடவும் தூண்டுகலாக இருந்திருக்கும். அத்துடன் கைப்பணித்துறையும் அபிவிருத்தி அடைந்திருக்கும்.

இப்படியான ஒரு பென்ஷன் திட்டம் தற்போது விவசாயிகளுக்கு அமுல் செய்யப்பட்டு வருகிறது.

கைப்பணியாளர்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்போது நாட்டின் கணிசமான எண்ணிக்கையானோர் பயன் அடைய வாய்ப்பு ஏற்படுகிறது.

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து பெரும்பாலானோர் அரசாங்க சேவையை நாடுவதற்கு தூண்டுகோலாக இருந்தது அரசாங்க சேவையில் இருந்து வரும் பென்ஷன் திட்டம் தான். அடுத்தது அரச சேவையில் இருந்து வந்த தொழில் பாதுகாப்பு. கோழி மேய்த்தாலும் 'கொர்ணமிந்தில்' மேய்க்க வேண்டும். என்பார்கள்.

தொழிலில் இருந்து ஓய்வு பெறும் போது எஞ்சிய காலத்தை நிம்மதியாக ஓட்டுவதற்கு பென்ஷன் திட்டம் உத்தரவாதம் அளிப்பதால் அரசாங்க சேவை எல்லோரையும் கவர்ந்ததில் ஆச்சரியம் இல்லை.

தற்போது இந்தத் திட்டம் அரசாங்கத் துறையுடன் மட்டும் நின்றுவிடாது தனியார் துறைக்கும் அறிமுகமாகி வருவதால் அரசாங்க சேவையில் இருந்துவரும் மோகமும் குறைய வழிஏற்படுகிறது.

# ஏப்ரல் முதல் பஸ் சீசன்

## வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்17

ஏப்ரல் மாதம் முதல் மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு சீசன் ரிக்கட் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் தெரிவித்தார்.

கடந்த வருடம் நடந்த அசம்பாவிதங்கள் காரணமாக சீசன் ரிக்கட் வழங்கமுடியாதநிலை ஏற்பட்டதாகவும், இதனால் சபைக்குப் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சீசன் ரிக்கட் பெற்றுக் கொள்ள விரும்புவோர் கோண்டாவில் டிப்போ பொது முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறும் திரு. கனகரத்தினம் கூறினார். (ஓ10)

# பாடசாலை நலனில் பெற்றோர் அக்கறை காட்டுவது அவசியம்

இன்றைய சூழ்நிலையில் பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் முழுமையாகக் கவனம் செலுத்தும் என எதிர்பார்க்க முடியாது. எனவே மாணவர்களின் நலன் கருதி பாடசாலை எடுக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெற்றோர்களும் நலன்விரும்பிகளும் முக்கிய பங்கெடுப்பது அவசியம்.

வடமராட்சி ... ர் கு டல் சூழல் பாதுகாப்பு இயக்க திட்டப் பணிப்பாளரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினருமான ஏ. என் திருச்செல்வம் மேற்கண்டவாறு கூறினர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் பெற்றோர்களுக்காக நடத்தப்பட்ட இக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் எஸ். தேவதாசன்— எதிர்காலத் தலைவர்களாகிய பிள்ளைகளின் நலன்களில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதிக அக்கறை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்..

மற்றும் சட்டத்தரணி கே. முத்துக்குமாரு எஸ். இராசையா. எஸ். சிவராஜசிங்கம், திருமதி எஸ் வாசுதேவா உட்படப் பலர் பேசினர். (இ-சி-160)

# ஏழாவது ஆண்டாக சென்றலைட்ஸ் கேடய மென்பந்து கிரிக்கெட்

விளையாட்டரங்கு

சென்றலைட்ஸ் வெற்றிக்கேடயத்துக்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

7 ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டி ஏப்ரல் மே மாதங்களில் நடைபெறும்.

கடந்த ஆறு வருடங்களில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 3 தடவைகளும், அரியாலை ஐக்கியக் கழகம் 2 தடவைகளும் ஐடியல் விளையாட்டுக் கழகம் ஒரு தடவையும் இந்தக் கேடயத்தைத் தமதாக்கியுள்ளன.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றலாம்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவு மார்ச் மாதம் 25 ஆம் திகதியாகும். (ஒ-7)

## தடுப்புக் காவலிலுள்ளவர்கள் விடுதலை தாமதமாகும்

கொழும்பு, மார்ச் 17

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யும் நடவடிக்கைகள் மேலும் தாமதமடையும்.

இப்படிக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக, அமைச்சர் சாகுல் ஹமீது தலைமையிலான குழு கடந்த வாரம் கூட இருந்தது.

சில காரணங்களினால் இக் குழுவின் கூட்டம் நடைபெறவில்லை.

தாமதம் குறித்து அமைச்சர் தொண்டமான் கொழும்புச் செய்தியாளரிடம் கருத்து வெளியிட்டார்.

தடுப்புக் காவலில் உள்ளவர்களை விடுவிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தற்சமயம் அந்த நடவடிக்கைகள் திடீரென்று நிறுத்தப்பட்டு விட்டன.

சில விஷயங்கள் சரியாக வரும் போது குழப்பியடிக்க நினைப்பவர்களினால் நல்லதும் நடக்காது போய் விடுகின்றது.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். (ஓ-எ)

## தடைப்பட்ட ஜீ. சி. ஈ பரீட்சை: மாணவர் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்லலாம்

யாழ்ப்பாணம், மார்ச்17

1987 டிசம்பரில் தடைப்பட்ட ஜீ. சி. ஈ சாதாரண தரப் பரீட்சை நடத்தப்படும் வரை பாடசாலைகளில் மேற்படி பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு வகுப்புக்கள் தொடர்ந்து வழமை போல் நடைபெறும்.

இவ்வாறு வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தற்பொழுது சர்ச்சைக்குரிய விடயமாகியுள்ள ஜீ. சி. ஈ சாதாரண தரப் பரீட்சையை எப்போது நடத்துவதென்று திட்டவட்டமாக முடிவாகாத காரணத்தினால் அதுவரையில் மாணவர்கள் தொடர்ந்து வகுப்புகளுக்குச் செல்லமுடியும் என்றும் பணிப்பாளர் கூறினர். (ஒ-9)

## வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு இந்தியப் பிரதமருக்குக் கடிதம்

வடமராட்சி மார்ச். 17

மூன்று அம்சக்கோரிக்கையை முன் வைத்து வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக்குழு இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது

★ அமைதியும் சுதந்திரமும் தமிழ் மண்ணில் உருவாக வேண்டும்.

★ மனதைக் கலங்கடிக்கும் 5மாதப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

★ நிரந்தரமான ஒரு சிறந்த தீர்வு ஏற்படுத்தப்பட்டு முற்றாகப் பாதிக்கப்பட்ட எமது கல்வியை நாம் சுதந்திரமாகத் தொடர வழி ஏற்பட வேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் மையமாக வைத்து வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு அண்மையில் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் அனுப்பி உள்ளது (இ-சி 160)

## முஸ்லீம்களுக்கு இன்னும் எத்தனை கட்சிகள் வருமோ?

'முஸ்லிம்கள் விழிப்புடன் செயலாற்றவேண்டிய கால கட்டம் இது வாகும். முன்னர் முஸ்லிம்களுக்கென ஒரு கட்சி உதயமாகியது. இப்பொழுது இரண்டாவது கட்சி ஒன்றும் மூளைத்திருக்கிறது. இன்னும் எத்தனை கட்சிகள் எம்மிடையே வருமோ தெரியாது!'

பிரதி தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் மேற்கண்டவாறு கூறினர்.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினர். (இ-19)

## அரசைக் கவிழ்க்கச் சதி: 7 எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்

கொழும்பு. மார்ச் 17

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக 44 பேர் மீது தொடரப்பட்ட வழக்கில் ஏழு எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்

குற்றத்தை ஒப்புக்கொள்ளாத எதிரிகளில் பஹாமா ம.பி.தினேஸ் குணவர்த்தனவின் இளைய சகோதரர் இந்திகா குணவர்த்தனவும் ஒருவர்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விமல் வி. திரபசூரிய முன்னிலையில் இவ்வழக்கு கடந்த திங்கள் விசாரணைக்கு வந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் மீது குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குற்றத்தை ஒப்புக்கொண்ட ஏழு எதிரிகளில் ஒருவர் தமிழர். 6 ஆவது எதிரியான அவரின் பெயர் ராஜரத்தினம் ஸ்ரீஸ்கந்தராஜா.

தண்டனை விதிப்பதை நளை 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி, ஏனையோருக்கு எதிரான விசாரணை இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவித்தார். (ஓ-எ)

## ஆப்கன் ஆட்சியிலும் இஸ்லாமுக்கு முக்கிய பங்கு!

காபூல், மார்ச் 16

ஆப்கன் அரசு இஸ்லாமிய ஆலோசனைக் குழு ஒன்றை நியமிக்கும்— இப்படி ஜனாதிபதி நஜிபுல்லா அறிவித்தார்

மதகுருமார்கள், கல்விமான்கள் இக்குழுவில் இடம் பெறுவர்.

இஸ்லாமிய பாரம்பரியம், அடிப்படைக் கருத்துக்களுக்கு இக்குழு முக்கியத்துவமளிக்கும். சமய விஷயங்களில் இக்குழு செய்யும் சிபாரிசுகளின் படியே அரசு நடந்து கொள்ளும். இஸ்லாமிய போதனை குறித்து இருந்து வரும் சட்டங்கள் விலக்கிக் கொள்ளப்படும்—

இப்படி ஜனாதிபதி நஜிபுல்லா காபூலில் தில்குஷா மாளிகையில் நடைபெற்ற கல்விமான்கள் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார். (எ)

## பங்களாதேஷின் அரச மதம் இஸ்லாம்

டாக்கா, மார்ச் 16

பங்களாதேஷின் உத்தியோக மதமாக இஸ்லாம் இருக்கும். இதற்கு வகை செய்யுமுகமாக சட்ட மூலம் ஒன்று புதிய நாடாளுமன்றத் தொடரில் கொண்டு வரப்படும் என்று ஜனாதிபதி முகமட் எர்ஷாத அறிவித்தார்.

"பங்களாதேஷின் மக்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள் ஆகவே இஸ்லாத்தை அரச மதமாகப் பிரகடனப்படுத்துவது பொருத்தமானதே.

"90 சதவீதமான மக்களின் வாழ்க்கை நெறியாக இஸ்லாம் இருக்கும் போது, ஏன் அதனை அரச மதமாக்கக் கூடாது?

புதிய சட்டத்தினால் 12சதவீதமான இந்து மக்களுக்கு பாரபட்சம் இழைக்கப்படமாட்டாது."


இப்படி ஜனாதிபதி எர்ஷாத் சொன்னர். (எ)

## ராஜ்யசபைக்கு சுப்பிரமணியசுவாமி போட்டியிடுகிறார்

புதுடில்லி, மார்ச்16

ஜனதாக் கட்சியின் சார்பில் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி இந்திய ராஜ்யசபாவில்காலியாக உள்ள எம். பி பதவிக்குப் போட்டியிடுகின்றார்.

ராஜ்யசபாவில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை காலியாகும் எம். பி. பதவிகளுக்கு இந்திரா காங்கிரஸ் சார்பில் 16 பேரும் ஜனதாக் கட்சியின் சார்பில் மூவரும் போட்டியிடுகின்றார்கள். இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களில் 7 பேர் மத்திய அமைச்சர்கள். (எ)



பொய்யாமொழி

குறள்:

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.

பொருள்:

நாட்டை ஆளும் தலைவருடைய உறவு தானே வந்து சேர்ந்தாலும், சோம்பல் உடையவர் சிறந்த பயனை அடைய முடியாது.

மரணதண்டனைவிதிக்கப்பட்ட

# 5 கறுப்பு இனக் கைதிகளுக்குக் கருணை காட்டுங்கள்

வாஷிங்டன், மார்ச் 16

மரணதண்டனை விதிக்கப்பட்ட ஐந்து கறுப்பு இனத்தவர்மீது கருணை காட்டும்படி அமெரிக்க அதிபர் றேகன், தென் ஆபிரிக்க அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

கறுப்பு இன அதிகாரி ஒருவரைக்கொலை செய்ததற்காக நான்கு ஆண்களுக்கும் ஒரு பெண்ணுக்கும் தென்ஆபிரிக்க நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்தது.

வெள்ளிக்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது

இந்தக் கைதிகளுக்குக் கருணைகாட்டும்படி பிரிட்டன், மேற்கு ஜெர்மன், அவுஸ்திரேலிய அரசாங்கங்களும் தென் ஆபிரிக்காவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி போத்தா, இதுவரை எல்லா வேண்டுகோளையும் நிராகரித்துவிட்டார். (எ)

## தென் ஆபிரிக்காவுக்கு றேகன் வேண்டுகோள்

## மே. இ. தீவுகளுக்கு காதிர் இன்னும் வரவில்லை

பாபடோஸ்,மார்ச் 16

மேற்கிந்திய தீவுகளுக்கு டெஸ்ட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணியின் ஆட்டக்காரர் அப்துல் காதிர் இன்னும் மேற்கிந்திய தீவுகளுக்கு வந்து சேரவில்லை.

பாகிஸ்தான் அணி மேற்கிந்தியாவுக்கு வரும் போது அப்துல் காதிர் அணியுடன் வரவில்லை.

அவர் சுகயீனம் காரணமாக இப்போது லண்டனில் உள்ள வைத்திய சாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவர் சில தினங்களில் மேற்கிந்திய தீவுகளுக்கு வந்து தனது அணியுடன் சேர்ந்துகொள்வார் என பாகிஸ்தான் தரப்பில் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் அணி இம்ரான்கான் தலைமையில் கடந்தவருடம் இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது அப்துல்காதிர் இடைநடுவில் வந்துசேர்ந்து ... (இ-7)

## டிட்டோவுக்கு கோர்பச்சேவ் அஞ்சலி!

பெல்கிறேட், மார்ச் 16

சோவியத் தலைவர் மிகெயில் கோர்பச்சேவ் யூகோஸ்லேவியாவின் முதலாவது ஜனாதிபதி டிட்டோவின் சமாதிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

சோவியத் — யூகோ பொருளாதார ஒத்துழைப்பு உட்பட பல்துறை சம்பந்தமாக உடன்படிக்கைகள் திரு. கோர்பச்சேவின் ... (எ)

வெளி உலகில்

## மாஸ்கோ நகரின் தேவைகள்

மாஸ்கோ, மார்ச் 16

மாஸ்கோ நகர மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது அரச அதிகாரிகள் கஷ்டப்படுகின்றனர்.

மாஸ்கோ நகர கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இப்படி நகர அதிகாரிகள் மத்தியில் தெரிவித்தார்.

மாஸ்கோ நகரின் சனத்தொகை சுமார் தொண்ணூறு லட்சமாகும்.

களஞ்சியங்கள் வெறுமையாக உள்ளன— என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# திபெத்துக்குத் திரும்புக!

## தலாய்லாமாவுக்கு சீன அரசாங்கம் அழைப்பு

லண்டன், மார்ச் 16

திபெத்துக்குத் திரும்பி சமயப் பணியில் தொடர்ந்து ஈடுபடுமாறு மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு சீன அரசு அழைப்பு விடுத்திருக்கின்றது.

சீன வெளியுறவு அமைச்சர் வூ ஷியூ லண்டனில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு சீன அமைச்சர் நாடு திரும்பும் வழியில் லண்டன் சென்றடைந்தார்.

சீன அமைச்சர் மேலும் சொன்னதாவது;

தலாய்லாமா புதுடில்லியில் இருந்து கொண்டு தேவையற்ற கருத்துக்களைக் கூறி திபெத் நிலைமையைக் குழப்பியடித்து வருகின்றார்.

தலாய்லாமா திபெத்துக்குத் திரும்பி மீண்டும் சமயப்பணிகளில் ஈடுபட முடியும். அவரை திபெத்துக்குத் திரும்பும்படி அழைக்கின்றேன்.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் திபெத் பற்றி செய்திகளைத் திரிபுபடுத்திப் பிரசுரிக்கின்றன.

இப்படிச் சீன வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார். (எ)

## எவரையும் குற்றம் கூற முடியாது

கடந்த சனிக்கிழமை காத்மாண்டு விளையாட்டரங்கில் இடம் பெற்ற சன நெரிசலில் 90 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு எவரையும் குற்றஞ் சாட்ட முடியாது.

இப்படி நேபாள உள்துறை அமைச்சர் நிரஞ்சன் தாபா சொன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
★ சகல விதமான றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, யாழ்நகர்.


# உதயன்

17 - 03 - 1988 வியாழக்கிழமை


திருமண கூறைவகைகளுக்கேற்ற
★ மணிப்புரி
★ பெனாரஸ்
★ காஞ்சிபுரம்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.



★ COMPUTER PROGRAMMING & DATA PROCESSING IN BASIC LANGUAGE

காலம்: 4 மாதம் கட்டணம்: 1000/-

★ COMPUTER PROGRAMMING & STRUCTURE FLOWCHART IN COBOL LANGUAGE.

காலம்: 3 மாதம் கட்டணம்: 1000/-

உலக பிரசித்தி பெற்ற Radio Shack Computer ல் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சி அளிக்கப்படும் (கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்)

NOTE:- வேறு நிறுவனத்தில் Basic படித்தவர்களும் அனுமதிக்கப்படுவர்.

ஆரம்பம்:-
19-3-88 11.00 A.M

Jaffna Technical Institute
52/1 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.



## குடாநாட்டு மக்களே!

நீங்கள் கடந்த காலங்களில் கொழும்புக்கு கொண்டு சென்று செய்து கொள்ளும் "லமி பக்கிங்" சேவையை இப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக் கொள்ள முடியும்

★ அடையாள அட்டைகள்
★ அதி முக்கிய ஆவணங்கள்
★ புகைப்படங்கள்

எதுவானாலும் உஷ்ணம், குளிர், தாக்காது 'லமி பக்கிங்' (Lami Packing) முறையில் அழகாகப் பத்திரப்படுத்திக் கொள்ளலாம்!

அளவு: 2 2" × 3.4" முதல் 10.5" × 14.8" வரையில்

★ உஷ்ண அச்சிடல் (Hot Printing)
★ பித்தளை, செம்பு, சில்வர், பாத்திரங்களில் பெயர் பொறித்தல்!
★ யாழ்-கொழும்பு பிரயாணப்பதிவு

இவற்றுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்!

★ ஹாசன் பலரக சேவை ★

21 6ஆம் குறுக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (2054)



YOUTH FOR CHRIST
Jaffna
PRESENTS
## "PARENT'S PROGRAMME"
ON
**18 - 03 - 1988 (Friday)**
3.30 p.m - 5.30 p.m.
AT
**FIG HALL**
(St. John's Church Hall)
**ALL WELCOME**
(1963)



## A.A.T. (Srilanka)
**STAGE 1**
June' 88 Exam

The Association of Accounting Technician

A.A.T. 3 பிரிவிலும் சித்தியெய்தும் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து பட்டயக் கணக்காளராக வருவதற்கு வாய்ப்புண்டாவதுடன், எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு பெறுவதற்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

அடிப்படைத் தகைமைகள்

1. 21 வயதுக்குட்பட்டவர்கள்
2. க.பொ.த சாதாரணதரம் சித்தி பெற்றிருப்பதுடன் கட்டாயமாக மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்பயிற்சியைப் பெற விரும்பின் ஏதாவது ஒரு ஸ்தாபனத்தில் தொழில் புரிபவராயின் அந்த ஸ்தாபனத்தின் வேலை கொள்வோரினால் ஆங்கிலத் தகைமை உடையவரென சிபார்சு பெறப்படல் வேண்டும்.
4. மாணவர் ஆரம்ப நிலையில் பயிற்றப்படுவர்.

மாணவர் விருப்பத்துக்கு ஏற்ப வேறு நிலைகளும் தொடரப்படும்.

இவற்றுக்கு தொடர்புடைய பாடங்கள்.

1. Basic Accounting
2. Communication
3. Business Administration.
4. Numaracy ans Statistics.

ஆண் பெண் இருபாலாரும் 25 3 88 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். சட்டணம் ஏனைய விபரங்கள் பற்றிய தகவல்கள் சங்கத்தில் அறிந்துகொள்ளலாம்.

தலைவர்
தெல்லிப்பளை ப நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.

14.3.88



எமது நேற்றைய வெளியீடு!

## உஷா சினிமா



சிவகுமார்
சரண்ராஜ்
ராதிகா
செந்தில்
செந்தாமரை
நடித்த
S. A. சந்திரசேகரனின்

(ஒரிஜினல் பிரதி) **பூவும் புயலும்**


## கிளிநொச்சி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போர் நிறுத்தத்தை உடனடியாக ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு உடன்படல் வேண்டும்.

அரசியல் காரணங்களுக்காக தடுப்புக் காவலில் உள்ள அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்தின்படி விடுதலை செய்யப்படல் வேண்டும்

வடக்கு, கிழக்கு இணையாத அதிகாரமற்ற மாகாணசபைத் திட்டத்தை எம்மீது திணிப்பதை உடன் நிறுத்தப்படல் வேண்டும்

இக்கோரிக்கைகள் மூன்று வாரங்களுக்குள் உடன் பதில் இல்லாவிடில் சுழற்சிமுறை உண்ணாவிரதம் மேற்கொள்ளவும், சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கவும்தயாரென்றும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது

மகஜர்கள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இந்தியத்தூதுவர் திரு. ஜே என். டிக்ஸிற் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(ஒ-76)

## அன்னை--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துச் சிகிச்சை அளித்து வருவதாக இந்திய இராணுவ விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக பி பி சி மேலும் தெரிவித்தது

இதனிடையில் மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் ஆலோசகர் கிங்ஸ்லி ராசநாயகம்இந்திய அமைதிப் படையினரால் கைது சய்யப்பட்டார் என்றும் பி.பி.சி. தெரிவித்தது. (அ-எ)

## சகஜ நிலை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாடுகளும் சரியானமுறையில் ஊக்கத்துடன் செயற்பட வேண்டும் என்று பேச்சுக்களின் போது வலியுறுத்தப்பட்டது.

ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் இலங்கை உறுதியாக இருப்பதாக அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார் என்றும் அறிவிக்கப்பட்டது.

பிரதமரைச் சந்திப்பதற்குமுன்னர், அமைச்சர் காமினி தலைமையிலான குழு, இந்திய பாதுகாப்பு அமைச்சர் பந்த், இணை அமைச்சர் [illegible] தனித்தனியாகச் சந்தித்துப் பேசியது. (அ-எ)


## Security Supervisors and Guards

AT JAFFNA, MANNAR AND VAVUNIYA

Applications are invited for the above posts Personnal residing in the respective areas who are physically "Fit and Smart" and possess G C, E. Qualification may apply Preference will be given to Ex-Policeman and Ex-Serviceman. Apply along with G S's and Police report. Copies of testimanials and Two (2) copies of Passport size Photos. Applications closing date 25 3-88.

C/o 93, Uthayan, 15, 2nd Lane, Power House Road, Jaffna.



## அரை ஆண்டு நினைவஞ்சலி

| ஆண்டவன் படைப்பில் | ஆண்டவன் படைப்பில் |
| --- | --- |
| 01-11-1958 | 04-06-1948 |

அழிவின் அணைப்பில்
21. 10. 1987



எஸ். ஜெகநாதன்
(புங்குடுதீவு)



க. மார்க்கண்டு
(கைதடி)

அன்பின் திருவுருவங்களே!
பண்பின் சிகரமாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த யாழ் — போதனா வைத்தியசாலையின் ஒளிச்சின்னங்களே!
தீபாவளித் திருநாளன்று எங்கு ஓடி மறைந்தீர்களோ?
உங்களை நினைக்கும் ஒவ்வொரு நிமிடமும் எமது உள்ளம் பற்றி எரிகின்றது.
உங்கள் உயிரையும் மதியாது கடமையே கண் என மகிழ்வு கண்டீர்கள்.
எங்கள் நெஞ்சங்களில் அணையாத ஒளித் தீ வீசும்.
நீங்கள் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.
உங்கள் பிரிவால் துயரால் வாடுகிறோம்! வருந்துகிறோம்!
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றென்றும் பிரார்த்திப்போம்.

ஒரே தினத்தில் மரணமான யாழ் போதனா வைத்தியசாலை உத்தியோகஸ்தர்கள் (21 பேர்) அனைவருக்கும் எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

நீர் விநியோகப் பகுதியினர்
யாழ் போதனா வைத்தியசாலை.

(1914)



## ஓராண்டு நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் சங்கீதமேதை ஏழிசைத்தீபம்
ந. சண்முகரத்தினம்

| பிறப்பு: | இறப்பு |
| --- | --- |
| 1915 - 06 - [illegible] | 1987 03 - 29 |

பாரிலே பல புகழும் பெற்று பாட்டினிலே பைந்தமிழ்க் கிளிபோல் பாடி பேட்ட இடமெலாம் கீதமாய் ஒலிக்கும் நாதமே!

நீங்கள் மறைந்து ஓராண்டாகி விட்டது எங்கள் குடும்பத்தின் சிகரமாயும், கலையின் சிகரமாயும் திகழ்ந்து இறைவனடி சேர்ந்த எங்கள் தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றென்றும் வேண்டிக் கொள்கின்றோம்

17 3 88இல் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

திருமதி சண்முகரத்தினம்
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள்

(1974)



## நீத்தார் பட்டியல்

### சின்னையா கந்தையா


சின்னையா கந்தையா காலமாகிவிட்டார். இவர் வள்ளியம்மையின் அருமைக் கணவரும், குலேந்திரன் (உதவி அரசாங்க அதிபர், கோப்பாய்), சத்தியமூர்த்தி (தபால் அதிபர், கல்கிரயோயா) சுந்தரமூர்த்தி (இரசாயனப் பகுப்பாளர் ஆயுர்வேத வைத்தியசாலை கைதடி), ரவீந்திரன (கிராம சேவையாளர் உடுவில்), சண்முகேந்திரன், கமலவேணி, சத்தியவேணி, விஜயவேணி, அருள்சோதி, கலாவதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், யோகநாதன், ஆனந்தராசா, சிவகுமாரன் (ஆசிரியர்கள்) ஆகியோரின் மாமனும், சிவேஸ்வரி அம்மாள், தவயோகராணி, கௌரி ஆகியோரின் அன்பு மாமனும் மாசிலாமணி, திருமதி தம்பிஇரத்தினம் ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியை நன் 17-03-88 இன்று மாலை 5 மணிஅளவில் குடும்ப மயானத்தில் நடைபெறும்.

தகவல்: K. குலேந்திரன்
உதவி அரசாங்க அதிபர்
கோப்பாய்.

(2065)



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன். விஜயானந்தன்
(கேதீஸ், ஜீவா)

| தாயின் மடியில்: | தாயக மண்ணில் |
| --- | --- |
| 1-2-1967 | 17-3-1987 |

திதி: 04-04-1988

சீற்றம் கொண்டு சிறுத்தையென
சிங்களப் படையை விரட்டியடித்த
எங்களின் இளவலே விஜயானந்தா!
களத்திலே நீயும் ஓர்
காவியம் படைத்த பின்
காலனுக் கிரையானாய்! கண்ணீரில்
கலங்குகின்றோம் நாங்களடா!
இன்றுடன் உன்னையிழந்தோர்
இதழ் உதிர்க்கிறது ஓர் வருடம்.
என்றும் உன் ஆத்மாவின் சாந்திக்காய்
எல்லோரும் பிரார்த்திக்கின்றோம்!

17-03-1988 இன்று வியாழக்கிழமை காலை 5 30 மணிக்கு சென். ஜோன்ஸ் தேவாலயத்தில் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் அனைவரும் பங்கு கொண்டு ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

குடும்பத்தினர், நண்பர்கள்.

(1969)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 17-03-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna on Thusday, 17th March 1988.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org